T 28294



மெய்ப்பொருள்

வண்ணநிலவன்

தமிழா, உனது வேலைகள் அனைத்திலுமே பொய்க் கதைகள் மிதமிஞ்சிவிட்டன. இவற்றை நீக்கிவிடு. வீட்டிலும், வெளியிலும், தனிமையிலும், கூட்டத்திலும் எதிலும் எப்போதும் நேர்மை இருக்க வேண்டும். நீயும் பிறரை வஞ்சிக்கலாகாது. பிறரும் உன்னை வஞ்சிக்கலாகாது. பிறர் பிறரை வஞ்சிப்பதையும் நீ இயன்றவரை தடுக்க வேண்டும். ஆதலால், தமிழா, எல்லாச் செய்திகளிலும் உண்மை நிலவும்படி செய்.

— மகாகவி சுப்பிரமணிய பாரதி

முதற் பதிப்பு
டிசம்பர்
1981

வெளியீடு
அன்னம் பிரைவேட் லிமிடெட்
சிவகங்கை 623 560

©
மெய்ப்பொருள்
வண்ணநிலவன்

அட்டை
ஞான. இராசசேகரன்

அச்சும் அமைப்பும்
அகரம் சிவகங்கை

விலை ரூபாய் 3—00

அன்னம்
நவகவிதை
வரிசை
2

மெய்ப்பொருள்

வண்ணநிலவன்

அன்னம் 5

அன்புள்ள வாசகரே!
நல்ல நூல்நயம் போன்ற உங்கள் தொடர்பை
அன்னம் விரும்புகிறது
இந்நூல் பற்றிய எண்ணங்களையும்
யோசனைகளையும் வரவேற்கிறது.
உங்கள் முகவரியை எழுதுங்கள்.
எங்கள் முகவரி இது:

அன்னம் (பி) லிட்:
2 சிவன்கோவில் தெற்குத்தெரு
சிவகங்கை 623 560

சமர்ப்பணம்

●

விக்கிரசிங்கபுரம்
வேலுச்சாமி பாண்டியனுக்கும்,
ந. பிச்சமூர்த்திக்கும்.

சாணை பிடிப்பவனிலிருந்து, கொசுக்கடி வரையிலும் அனைத்தையும் தன் கவிதையில் கையாளும் வண்ணநிலவன், திருநெல்வேலியின் 'தாதன் குளம்' கிராமத்துக்காரர். 34 வயது நிரம்பி இருக்கும் இவர், தற்போது 'துக்ளக்' இதழின் உதவி ஆசிரியர். சிறுகதை முதற்கொண்டு சினிமா வரையிலும் பலவித 'மீடியம்களை' சோதிக்கும் இவரது கவிதைகள் தேடல் மிகுந்தவை. 'அவரவர் வானம் அவரவர்க்கே யானாலும் அடியாமல் பிடியாமல் வசப்பட வழியில்லை' என்னும் இவரது குரலில் மெய்ப்பொருள் கதிரொளி வீசுகிறது. 'கம்பாநதி.'கடல்புரத்தில்', 'ரெயினீஸ் ஐயர் தெரு' ஆகிய நாவல்களும், 'எஸ்தர்', 'பாம்பும் பிடாரனும்' ஆகிய சிறுகதைத் தொகுதிகளும் இவர் தமிழுக்குத் தந்தவை. இவரைக் கண்டெடுத்துத் தந்தவர் வல்லிக்கண்ணன்.

மெய்ப்பொருள்

காலத்தை
வெல்லாத கவிதை

சோறு தேடிச் சென்ற குழந்தைகள்
தீபாவளி வெடிச் சாம்பலில் உறங்கும்.

என்ற போதும்—
எஞ்சிய குழந்தைகள்
என்றேனும் வெடி மருந்து கொளுத்தி
எரிந்தவரை உயிர்த்தெழ வைப்பார்.

ரெயினீஸ் ஐயர் தெருக்காரர்களும் சாணை பிடிப்பவனும்

நாங்கள்—
நீண்ட நாட்களாய்
சாணை பிடிப்பவனைத் தேடிக் கொண்டிருக்கிறோம்.
பழைய சோற்றுக்கு,
பத்து பைசா நாணயத்துக்கு,
அப்பாவின் கிழிந்த சட்டைகளுக்கு,
சாணை பிடித்துக் கொடுப்பான்.

மழை வந்து—
மேஜைக் கத்தி, கத்திரிக்
கோல்களின் முனைகளெல்லாம்
துருப் பிடித்து
மிக மோசமாய்
மழுங்கிக் கிடக்கின்றன.
எங்கள் நினைவுகளில்
முன்பிருந்த வெண்மைக் கூர்
பளிச்சிடுகிறது.

அவன் வந்தால்—
இதையெல்லாம் தீப்பறக்கத் தீட்டி,
அதன்
வெண் பளிங்கு முனைகளில்
இரு விரல்களோட்டி,
கூர் பார்த்துத் தருவான்.

மழை நாட்களில் —
எங்கள் ரெயினீஸ் ஐயர் தெரு
பார்க்க அழகாயிருக்கும்.
எங்கள் தெருவிலிருக்கிற
சர்ச் மணிக் கூண்டில்,
சில மாடப் புருக்கள்
மழையை வேடிக்கை பார்ப்பதுண்டு.

முன்பொரு மழை நாளில்தான்
சாணைக்காரன் வந்தான்;
மழையில் நனைந்து வெடவெடத்தான்
—என்கிற நினைவுகளை விட
மழையைப் பிளந்து
ஒலித்த
அவன் கட்டைக் குரலே
இன்னும் நினைவிலிருக்கிறது.

அவனும், சாணை மிஷினும்
அன்று மிகவும் நனைந்து போயிருந்தார்கள்.
அவர்களுக்கு மிகச்சிறிய
இடமே போதுமானது.
ஆடுகள் ஒதுங்கி நிற்கிற
கூரையடிகள்,
'சன்ஷேடு'களின் கிழிடங்கள்
இருவருக்குமே போதுமானவை.

அந்த மழையிலும்
அவனது சாணைக்கல்
தீப்பொறியிட்டது.
கூர் இழந்த
எங்கள் ஆயுதங்கள்
கூரடைந்தன.
அவனொரு மந்திரக்காரன்.

இன்றும்—
மழை பெய்து
எங்கள் ரெயினீஸ் ஐயர் தெரு
நனைந்து போய்
பார்க்க அழகாயிருக்கிறது.

எங்கள் தாத்தாவுக்கு
அவன் கட்டைக் குரலை
நன்றாகத் தெரியும்.
அடையாளம் கண்டு கூப்பிடுவதற்காகத்
தாத்தாவைத் திண்ணையில்
காத்திருக்கச் செய்திருக்கிறோம்.

தாத்தாவைத் தவிர—
பழைய சோறு,
பத்து பைசா நாணயம்
அப்பாவின் கிழிந்த சட்டை
எல்லாம்
அவனுக்காகக் காத்திருக்கின்றன.

உயிர்ப் பெண்

உன் தவமியற்றி
ஓயும்
என் காலச் சிறு நிழல்.

திருத்திய பதிப்பு

என் கைகளோ மிகவும் சிறியவை.
அழகற்றவையும் கூட.

என் கால்களோ
கவனமின்றி உருவாக்கப்பட்டவை.
சிறிதும் கூச்சமற்று
ரத்தம் தோய்ந்த சுவடுகளையே பதிக்கின்றன.
இருந்த போதும்,
இந்த உலகத்தை நான் நேசிக்கிறேன்.

ஏனென்றால்—
அது,
ரொம்பவும் உண்மையானது;
அதன் அழகோடும், குரூரத்தோடும்.

காலமும்
தூரமும்

கணக்கின்றிச் சிற்பங்கள்
வெளியெங்கும் புதைந்து கிடக்க,
என் வழி நீள்கிறது
நானும் சிலையாக.

மெய்ம்மை

மனவெளியில் அலைந்துருகும்
கருங்காக்கை
முகந் திருப்பிப் பார்த்தாலோ
அகங்காரக் கரைச்சல்
(நின்றாலும் கொத்திப் பிடுங்கும்)

என்னூர் என் தேசமென
உவப்பற்றுத் திகழும்
வாழ்வியல் மெய்ம்மையே...ஏ...ஏ...

அப்பாவுக்குப் பிண்டச் சோறும்,
குழந்தைக்குப் பீத்துணியும்,
எனக்குப் பொருத்திக் கொள்ளவொரு
யோனி முடுக்கும் போதுமோ?

பள்ளு

'சுதந்திரம் வந்தாச்சு'
சொர்க்கம் சமீபத்திலென்றார்.
சொர்க்கத்தைப் பார்த்தவர்கள்
உடனே தகவல் தாருங்கள்.

இந்தியா—1981

குருடரை விரட்டியடித்த
குண்டாந் தடிகள் குவிந்து கிடக்க,
நண்பா விளையாட்டாய்(க்)
கொஞ்சம் ஹரிஜன்களைக்
கொளுத்தலாம் வா.

நகர மாந்தருக்கு
நாலாயிரம் பிரச்னைகள்.
ஸிட்டி பஸ்ஸில்
கார்ட்ருடி தேவை
பரத நாட்டியம் கண்டவர்
பத்மாவா, ஸுப்ரமண்யமா?
'சுப்புடு' கணக்கில்
ஹைவமதிக்கு ஜதிக்கட்டு பற்றுது.
வாழ்க, இலக்கியப் பேரொளி
ஸெல்மா லாகர் லாவ்வ்வ்வ்.....
இன்று ஞாயிறு—அதனால்
இக்மார் பெர்க்மான் படக்காட்சியுண்டு.
தவறுது வருகை தாரும்.

நாட்டுப்புற வயல்வெளியில்
நாயுடன் மனிதர் பொருதுகிறார்.
முதலில் மடிவோர்—பரிசை
முந்திப் பெறுவார்.
ஹரிஜனங்களை எரிக்கும்
வீர விளையாட்டும் உண்டு.

சைவமும் தமிழும்
தழைத்தினிது ஓங்குக.

மன இமைக் கதவென்றல்
படிமமாச்சு
சிந்தனையில் சிவப்பு சேர்த்தால்
சிவந்த சிந்தனையாச்சு.
'பிரியமுள்ள' என்றல்
அன்பு மயமாச்சு.

தென்னுடைய சிவனே போற்றி
எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி.

கலை — ஸாரம்

குலவணிகர்புரமோ
கும்பகோணமோ
கும்பாபிஷேகம் உண்டு.

(வேறு)

படிக்கப் பைபிள்
இடிக்கப் பெருமாள்

கலைக்கரசர் கருணாநிதி
இலக்கியத்துக்கரசர் மௌனி சுவாமிகள்.
நாவுக்கரசர் டி. எஸ்.
நமச்சிவாயம் பிள்ளை.

கலாஸாரப் புரட்டு
திருவாதிரைக் களிக்குதவும்.
கானல் நீர் பானுமதிக்கு நன்று.

கலையமைதிக் கழகம்
கம்பன் கொலைக் கழகம்

சொல்லேருழவர்
புல்லேர் ஓட்டுகிறார்,

அத்தானி மண்டபத்தையும்
'உன்னதக் கலை'ப் புரட்டையும்
கழுகுமலைக்காரன்
கணக்குத் தீர்த்துக் கொள்வான்.

ஆகுதி

நிழல்கள் பொது—
மாடனுக்கும்
சோமயாஜுலுவுக்கும்.

எனக்கும் உனக்கும் மனம்.
பிறகு, பஞ்சபூதமும்.

கரும்பும், நெல்லும்
கழனியில் விளைந்து
ஆலைக்கு மாறினாலென்ன?
சர்க்கரை, அரிசி மாடனுக்கில்.

கரும்பும், நெல்லும்
கழனியில் விளைந்து.

பிறகு

உடல் ஊனமுற்ருேர்,
கண்ணற்ருேர்,
தொழுநோயாளர், குழந்தைகள்,
பெண்டிர், முதியோர் நீக்கிச்
சண்டைக்குப் போனுலும்
பல கோடிப் பேர்கள்
படையில் சேருகிருர்.

அவரவர் வானம்
அவரவர்க்கே யானுலும்
அடியாமல் பிடியாமல்
வசப்பட வழியில்லே.

விதி

விடை தேடி விடை தேடிச்
சலிக்கும் மனமே நில்.

கிழத் தெருவில் அச்சாணி சத்தமிட
வைக்கோல் வண்டி போகிறது.
நேற்று நடந்த மாட்டுத் தாவணித் திடலில்
இன்று காகங்கள் இரை தேடுகின்றன.
நீரில்லா ஆற்று மணலில்
தாத்தாவுக்குப் பின் நீயும் தடமிடு.

ஆனாலும், கேள்விகள் இன்னுமுண்டு
கம்போடியக் குழந்தைகள்
அகதிகள் முகாமில் மரிப்பதென்ன?
புராண யுத்தங்களில் விலக்கப்பட்ட
முதியோர், பெண்டிர், குழந்தைகள்
விதி வந்து சாகும் வரை
வேலை செய்வதென்ன?
வீட்டிலும், வீதியிலும் விதி காத்திருக்கிறது.
நீயல்லவென்றாலும்
என்றேனுமுன் சந்ததி
கம்போடிய மண்டையோடுகளுடன்
போட்டியிட்டுக் குவியும்.

தப்பித்து ஓடுவதற்கு
விதிகள் நிறைந்த சாலையல்ல இது.

ஆனாலும்,
அணு குண்டுச் சாம்பலில்
அகிலங்கள் உறங்கிய போதும், உன்
கேள்விகள் உறங்குவதில்லை.

விடை தேடி விடை தேடிச்
சலிக்கும் மனமே நில்லு.
கீழத் தெருவில் அச்சாணி சப்தமிட
வைக்கோல் வண்டி போகிறது.

1 + 1 = 2

உலகம் உண்டான
விதம் பற்றி
உண்மையொளி பாய்ச்சி
உவப்புற்றிருந்த வேளையில்
ஜன்னலுக்கு வெளியே,

ஜன்னலுக்கு வெளியே,
மனிதக் கூட்டம்
சோறு தேட.

தமிழ் மணம்

சைவக் கவி மாணிக்கவாசகம் பிள்ளை,
அசைவக் கவி பேட்மாநகரத்து உதுமான் புலவர்.
வைணவக் கவி திருமலாச்சாரியார்.
அரசவைக் கவி ஆட்சிக்கு ஒருவர்.

இவர்கள் தவிர—
கணையாழிக் கவிஞர் ந. ஜயபாஸ்கரன்,
சினிமாக் கவி கங்கை அமர்
இலக்கியக் கவி தர்மூ சிவராம்
முற்போக்குக் கவிஞர் தணிகைச் செல்வன்
என்று
ஒவ்வொரு சபைக்கு
வொவ்வொரு ஆஸ்தான கவி.

ரோகம்

பல்வேறு பற்கள்
செழித்து வளருமிடம் திருநவேலி
கோரைப் பல், சிங்கப் பல்,
உடைந்தபல், தேய்ந்தபல்,
ஒருச்சாய்ந்து வளர்ந்தபல்
லென்று—
திருநவேலியில்
பல்வேறு பற்கள்
செழித்து வளருது.

மூன்ருவது கிரகம்

ஒவ்வொருவர் உள்ளாடையிலும்
மறைந்திருக்கும் கத்தி.
நான் உன்னையழிக்க,
நீ யென்னையழிக்க;
உலகம் வழி நடக்கும்.

அனந்தம்

ஒன்றுக்குள் ஒன்பது
பிரபஞ்ச இயல்பு.
கொசுக்கடி ஒன்று
கடியாலணையும் வியாதிகள் பல
ஒன்பதுக்குள் ஓராயிரம்.

நிலையம்

பட்டினத்துக்கு வந்து
பட்டினத்தாரானோர் பலர்
பட்டினத்தாருக்குப் பின்
பாரதி,
புதுமைப்பித்தன்.
பட்டினத்துக்கு வந்து.

பகை அல்லது
முரண்பாடு

தாவரம் தானென்றாலும்
ஆப்பிள் மரமும்
தேவதாருவும் ஒன்றாகாத உலகமிது.
ஊர்வன, பறப்பன, மிருகங்கள் கூட.

திமிங்கிலமும், சிலேபி மீனும்
மீனினமென்று கடையில் விற்றாலும்
பகையறியாமல் போவேனோ?

ஆனபோதும் மீனினம் மீனம்தான்.
தாவரம்
தாவரமே.

ஆதிமூலம்

என்னைப் பிட்டேன்
உலகமாயிற்று.
உலகத்தைப் பிட்டேன்
நானுனேன்.

மெய்ப்பொருள்: 1

என் கைப் பொருளே,
என் கைப் பொருளே.

தாய், சகோதரி,
மனைவி, மகள் என்றுன

என்கைப் பொருளே
என் கைப் பொருளே.

மெய்ப்பொருள்: 2

எதையேனும் சார்ந்திரு
கவித்துவம்,
தத்துவம், காதல்,
இங்கிதம், சங்கீதமிப்படி
எதன் மீதேனும் சாய்ந்திரு.
இல்லையேல் உலகம்
காணாமல் போய் விடும்.

மெய்ப்பொருள்: 3

எல்லாம் விலை குறித்தனவே
எல்லாம் விற்பனைக்கே
ஹே, அர்ஜுனா,
விற்பதைத் துணைக் கொள்.

காய்ந்த விறகோ, ஹரி கதையோ,
பழைய ஹிந்து பேப்பரோ, மகளோ,
கலையோ, கருமாரியம்மனோ...

வேஸ்ட் பேப்பருக்கும்
வேசிக்கும் சமவிலைதான்.

சூரியனுக்குக் கீழுள்ள சகலமும் விற்பனைக்கே.
விற்பனை செய்வாய், விற்பனை செய்வாய்.

மியூஸிக் அகாடமியில் கலை விற்பனை.
கந்த விலாஸ் கடையில் ஜவுளி விற்பனை
அரபு தேசத்தில் இளைஞரும்
சீரணி அரங்கில் அரசியலும்.

‘பாக்கு மன்னன் பூச்சி’
டிரேட் மார்க்கில் கவனம் வை.
மரமும், மகனும்
காய்த்துக் கனிதருவர்.
உட்லண்ட்ஸ் ஹோட்டலில் டிபனுற்பத்தி,
பழனியில் பஞ்சாமிர்த உற்பத்தி.
கலைப் படம் கான்ஸ்டாண்டி நோபிளுக்கு,
கமர்ஷிமல் படம் காரைக்குடிக்கு.

ஐயப்பசாமிக்கும், ஐயனுர் காபிக்கும்
பிராஞ்சுகள் திற.
மாடர்ன் ஆர்ட்டுக்கு மார்க்கெட் தேடு.

ஓய்ந்த நேரத்தில்
நட்புச் செய்தாலும்
நாய் வளர்த்தாலும்—நல்ல
லாபமுண்டு.

மெய்ப்பொருள்: 4

கா: எனக்கது நக்ஷத்திரம்—
நக்ஷத்திரத்துக்கு நான் யார்?
அது சூரியன்—
சூரியனுக்கு நான் யார்?
ரெயினீஸ் ஐயர் தெரு—
தெருவுக்கு நான் யார்?

சா: பெயர் வைத்தவன் படைப்பாளியோ?

டா: திசைகளறியுமோ கிழக்கும், மேற்கும்?
கடலைக் கடலறிந்தால்
கானகத்தைக் கானகமறியும்.

தா: வேதனையும், சந்தோஷமும்
முதல் குரங்கின் உபயம்.

பா: உலகையளக்கப் புறப்பட்ட பூதங்கள்
அடிக்குச்சியைச் செப்பனிட்டுச்
செப்பனிட்டு ஓய்ந்தன.

றா: என்றாலும்—
ஓய்வு ஓய்வல்ல.
கடலும், கானகமுமறியாததை
மனிதக் கடவுளறிவான்.

அன்னம் நவகவிதை வரிசை 2

●

தமிழுக்குப் 'புதுப் புதுப்
புதுப் புதுப் புதுமைகள்' காட்டிய
மகாகவி சுப்பிரமணிய பாரதியின்
நூற்றாண்டு விழாவில்
சொல்லிலும் சுவையிலும்
பொருளிலும்
புதுமை பாய்ச்சும் நவ கவிஞர்களை
அன்னம் பெருமையுடன்
அறிமுகப்படுத்துகிறது

'வண்ணநிலவனி'ன்
'மெய்ப் பொருள்' நவகவிதை
வரிசையில் வரும்
இரண்டாவது நூல்

●

சாணை பிடிப்பவனிலிருந்து, கொசுக்கடிவரையிலும் அனைத்தையும் தன் கவிதையில் கையாளும் வண்ணநிலவன், திருநெல்வேலியின் 'தாதன் குளம்' கிராமத்துக்காரர். 34வயது நிரம்பி இருக்கும் இவர், தற்போது 'துக்ளக்' இதழின் உதவி ஆசிரியர். சிறுகதை முதற்கொண்டு சினிமா வரையிலும் பலவித 'மீடியம்களை' சோதிக்கும் இவரது கவிதைகள் தேடல் மிகுந்தவை. 'அவரவர் வானம் அவரவர்க்கே யானாலும் அடியாமல் பிடியாமல் வசப்பட வழியில்லை' என்னும் இவரது குரலில் மெய்ப்பொருள் கதிரொளிவீசுகிறது. 'கம்பாநதி, 'கடல்புரத்தில்', 'ரெயினீஸ் ஐயர் தெரு' ஆகிய நாவல்களும், 'எஸ்தர்', 'பாம்பும் பிடாரனும்' ஆகிய சிறுகதைத் தொகுதிகளும் இவர் தமிழுக்குத் தந்தவை. இவரைக் கண்டெடுத்துத் தந்தவர் வல்லிக்கண்ணன்.